Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X



# The Merits of Women in the Sangam Period

**Dr. P. M. Jayakala**, Associate Professor, Department of Tamil, S.T. Hindu College, Nagercoil- 2, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-0736-0047
**DOI: 10.5281/zenodo.14752791**

## Abstract

*Literature tells us that women lived with dignity during the Sangam period. Women of that time were called by many names like Mangala Mahal, Manaiyal, Mellyil Mahal, Seyizhay Mahal, Veyyol, and Vasayil Mahal. Tolkappiyar says that the primary qualities of a woman are fear and modesty. Moreover, life is the most important thing for living beings in the world. But Tolkappiyar points out that modesty is better than life for women and chastity is better than wisdom. The hero says that the love of the heroine will continue in the next birth. No matter how many births she takes, loving women think that her husband should come as her husband in all births. The hero's love is revealed by the hero cooking as he likes. Literature shows that the love that women of the Sangam period had for their husbands was greater than the earth, higher than the sky and deeper than the sea. There is no better wealth for women than children. Hospitality was one of the essential customs practised by their ancestors. Women who lived in the Sangam period were also known for their bravery. The bravery of women is revealed through the mother who sent her only son to war the day after her father and husband died in the war. This article studies the merits of the Sangam Women.*

**Keywords:** Sangam Period, Women, Progeny, Love, Chastity, Valour.

## References

[1] Alex Aruldasan, N. "Velan Malir Samuka Vazhviyal." *Tamil Mozhi Mattum Ilakkiya Pannaddu Ayvithzh*, Thokuthi-2, Sirappithazh-3, Thokuthi-1, February-2020.
[2] Karunanithi, M, Kalaignar. *Thirukural.* Thirumakal Nilaiyam, Chennai-17, 2003.
[3] Jeyabal, R. Dr. *Aagananuru.* New Century Book House, 2014.
[4] Selvarasu, A. Dr. *Purananooru* (1 & 2). New Century Book House, 2014.
[5] Thirugnasampanthar, S. Perasiriyar. *Tholkappiyam.* Kathir Pathippagam, 2018.
[6] Nagarajan, V. Dr. *Kurunthokai*. New Century Book House, 2014.
[7] Nithiya Araventhan, Dr. *Kurignsippaddu.* New Century Book House, Chennai, 2024.
[8] Balasubramaniyan, Ku.Ve. Dr. *Nattinai*. New Century Book House, Chennai, 2014.
[9] Poornima, M. "Sanka Ilakkiyatthil Penkalin Isai Unarvu." *International Journal of Creative Research Thought (IJCRT)*, Thokuthi-11, Ithazh-2, Pathippu, February-2023.
[10] Muneesmoorthy, M. *Kalitthokai*. New Century Book House, Chennai, 2024.
[11] Yogeshvari, A. "Thiru. V. Kavum Penniyach Sinthanaiyum." *Tamil Mozhi Mattum Ilakkiya Pannaddu Aayvithazh*, Thokuthi-2, Sirappithazh-3, Thokuthi-1, February-2020.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X


# சங்க காலப் பெண்களின் மாண்புகள்

**முனைவர் பா. ம. ஜெயகலா**, இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
தென் திருவிதாங்கூர் இந்துக்கல்லூரி, நாகர்கோவில்-2, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-0736-0047
DOI: 10.5281/zenodo.14752791

## ஆய்வுச் சுருக்கம்

*சங்ககாலத்தில் பெண்கள் சிறப்புற்று வாழ்ந்ததை இலக்கியங்கள் நமக்குப் பறைச்சாற்றுகின்றன. அக்கால பெண்கள் மங்கல மகளிர், மனையோள், மெல்லியல் மகளிர், சேயிழை மகளிர், வெய்யோள், வசையில் மகளிர் என பல பெயர்களில் அழைக்கப்பட்டனர். தொல்காப்பியர் பெண்ணின் முதன்மை குணங்களாக அச்சம், நாணம், மடம், என்கின்றார். மேலும் உலகில் வாழும் உயிரினங்களுக்கு முதன்மையானது உயிர். ஆனால் அந்த உயிரை விட பெண்களுக்கு நாணமே சிறந்தது என்றும் ஞானத்தை விட கற்பே மேலானது என்றும் தொல்காப்பியர் எடுத்தியம்புகின்றார். தலைவன் தலைவியின் அன்பானது மறுபிறவிலும் தொடரும் என்கின்றார். எத்தனை பிறவிகள் எடுத்தாலும் தன் கணவனே எல்லா பிறவிகளிலும் கணவனாக வரவேண்டும் என அன்புடைய பெண்கள் எண்ணுகின்றனர். தலைவனுக்குப் பிடித்தது போல் தலைவன் சமைத்துக் கொடுப்பதன் மூலம் தலைவியின் அன்பானது வெளிப்படுகின்றது. சங்க கால பெண்கள் தன் கணவனோடு கொண்ட அன்பினை நிலத்தை விட பெரிதாகவும் வானினை விட உயர்ந்ததாகவும் கடலை விட ஆழமானதாகவும் இருந்ததாக இலக்கியங்கள் சுட்டுகின்றன. பெண்களுக்கு மக்கட்பேற்றினை விட சிறந்த செல்வம் எதுவுமில்லை. குழந்தையைப் பெற்றெடுத்து அதனை பேணி வளர்ப்பது ஒரு தாயின் பெரும் பேறாக கருதப்பட்டது. தம் முன்னோர்கள் கடைப்பிடித்த இன்றியமையாத பண்பாடுகளில் ஒன்று விருந்தோம்பலாகும். சாகாத மருந்தாக இருந்தாலும் அதனை தாம் மட்டும் உண்பது பண்பாடில்லை. சங்க கால பெண்கள் இலக்கிய ஆளுமை மிக்கவர்களாகவும் இசை வல்லுநர்களாகவும் காணப்பட்டனர். பெண்களின் இசைக்கு காட்டு விலங்குகளும் மயங்கி உறங்கியதை இலக்கியங்கள் வழி அறிய முடிகின்றது. சங்க காலத்தில் வாழ்ந்த பெண்கள் வீரத்திலும் சிறந்தவர்களாக விளங்கியுள்ளனர். தந்தையும் கணவனும் போரில் இறந்து விட மறுநாள் போருக்கு தன் ஒரே மகனை அனுப்பிவைத்த தாயின் வீரம் வெளிப்படுகின்றது.*

**குறிப்புச்சொற்கள்:** சங்க காலம், பெண்கள், மக்கட்பேறு, அன்பு, கற்பு, இசை, வீரம், மகளிர்.

## முன்னுரை

உலகில் வாழும் உயிரினங்களுக்கு முதன்மையானது உயிர். ஆனால் பெண்களுக்கு உயிரை விட கற்பொழுக்கமே சிறந்தது. தொல்காப்பியர் அச்சம், நாணம், மடன் என்பன

பெண்களின் முதன்மை குணங்களாக குறிப்பிடுகின்றார். சங்க கால பெண்களின் கற்பொழுக்கம், தலைவன் தலைவியரின் அன்பு, மக்கட் பேறு, விருந்தோம்பல், இசை புலமை, வீரம் என்பனவற்றை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**சங்க கால பெண்கள்**

பொற்காலம் என்று போற்றப்படும் சங்க காலத்தில் பெண்கள் சிறப்புற்று விளங்கியுள்ளனர். இவர்களை மங்கல மகளிர், மனையோள், மெல்லியல் மகளிர், சேயிழை மகளிர், வெய்யோள், வசையில் மகளிர் எனப் பல பெயர்களில் அழைக்கப்பட்டதை இலக்கியங்கள் வழி அறிய முடிகின்றது. இவர்கள் கற்பில் சிறந்து விளங்கினர். மக்கட்பேறு, விருந்தோம்பல், நட்பு, அன்பு, நாணம், அடக்கம் என்பன போன்ற பெண்மை குணங்களிலிருந்தும் வழுவாது வாழ்ந்தனர். ஆண்களுக்கு நிகரான கல்வியைப் பெற்று அரசவைகளில் அமைச்சராகவும் உயர்ந்து விளங்கியுள்ளனர். இசைக்கலையில் வல்லவர்களாகவும் திகழ்ந்தனர். வீரம் நிறைந்தவர்களாகவும் காணப்பட்டனர். "கணத்துக்கு கணம் மாறுபடும் உணர்வே! நீதான் பெண் என்றார் அறிஞர் ஷேக்ஸ்பியர். 'அன்பிற்கு இருப்பிடமாக தியாகத்திற்கு உறைவிடமாக இருப்பவளே பெண்' என்றார் அறிஞர் மால்ஸ்டாய். 'உலகை உய்விக்க வந்த உயர்வான ஆத்மாக்களை அறிந்தவளே பெண்' என்றார் பெரும் மேதை பெர்னாட்ஷா. 'மனையாளும் தெய்வமே பெண்' என்றார் பெண்ணுரிமை பேச வந்த பெருங்கவிஞர் பாரதியார். 'தாய்மையின் தனி இருப்பிடமே பெண்' என்றார் மறைமலையடிகள். அன்பு, அறம், ஆண்மை அனைத்தின் வாழ்வும் வீற்றிருப்பது பெண்மையின் வாழ்வில் என்றார் டாக்டர் மு. வரதராசனார். " (ஞா. அலெக்ஸ் அருள் தாசன். ப. 16). இவ்வாறு பெண் குறித்து பலரும் பல கருத்துக்களைக் கூறியுள்ளனர்.

மெல்லியல் என்று அழைக்கப்படும், "பெண்மைக்கு திரு.வி.க கண்டுரைத்த இலக்கணம் மகளிர் பற்றி பொதுவாக நிலவும் கருத்தினினும் சில வகைகளால் மாறுபட்டது. தனித்தன்மை வாய்ந்தது. அவர் கருத்தின் படி பெண் என்ற சொல் பால் வேறுபாட்டை மட்டும் உணர்த்துவதன்று பெண்ணுக்குரிய பண்புகளாகக் குறிக்கப்படுவதையும் சேர்த்து உணர்த்துவதாகும். இன்பமோ, நுண்ணியது. காணக் கூடாதது. காணக் கூடாத இன்பம் பெண்ணாகி நமக்கு காட்சி அளிக்கிறது. பெண்மை என்னும் இன்பத்தை ஏந்தி நிற்கும் பெண்ணை வெறும் பெண் எனக் கொள்ளாது பெண் தெய்வம் என்று போற்றலாம். இங்ஙனம் பெண்மையுடைய பெண்ணை முதன்மை யுடையவள் எனில் என்ன முழுகிப் போகும். "(அ. யோகேஸ்வரி. ப. 389). இவற்றின் மூலம் பெண்ணின் சிறப்பினை அறிய முடிகிறது.

**பெண்ணின் குணங்கள்**

தொல்காப்பியர் பெண்ணின் முதன்மை குணங்களாக அச்சம், நாணம், பேதமை என்கிறார். இதனை,

**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

**அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்**
**நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப (தொல். பொருள். 96)**

இந்நூற்பா வழி அறியலாம். பேதமை குணம் கொண்ட பெண்டிரின் இயல்புகளை,

**செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்**
**அறிவும் அருமையும் பெண்பா லான (தொல். பொருள்.206)**

இந்நூற்பாவழி தொல்காப்பியர் சுட்டியுள்ளார். உடலாலும் உள்ளத்தாலும் அடக்கமாயிருத்தல், மனம் அலைபாயாமல் அமைதியுற்று இருத்தல், மனங்கோடாமை, செய்ய தகுந்தவற்றைக் கூறுதல், நன்மை தீமை தருவனவற்றை அறிதல், தம் உள்ளக் கருத்தைப் பிறர் அறிய முடியாமை இத்தகைய அறுவகைப் பண்புகளையும் பெண்டிருக்கு உரியன என்கிறார். தலைவன் தலைவியருக்கு ஒத்திருக்கும் பண்புகளாக தொல்காப்பியர் கூறியதை,

**பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோடு**
**உருவு நிறுத்த காம வாயில்**
**நிறையே அருளே உணர்வொடு திரு**
**என முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே (தொல். பொருள். 269)**

இந்நூற்பா வழி அறிய முடிகின்றது.

**கற்பொழுக்கம்**

மனையுறை மகளிரின் மாண்புகளைத் தொல்காப்பியர் தெள்ளத் தெளிவாக எடுத்துரைத்துள்ளார். இதனை,

**கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்**
**மெல்லியல் பொறையும் நிறையும் வல்லிதின்**
**விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்**
**பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள் (தொல்.பொருள். 150)**

இந்நூற்பா எடுத்துரைக்கின்றது. கற்பு, பேரன்பு, இல்லற ஒழுக்கம், பொறுமை, அடக்கமுடைமை, விருந்தினரைப் போற்றுதல், உறவினரைப் பாதுகாத்தல் என்பனவற்றை பெண்களின் மாண்புகளாகத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

உலகில் வாழ்வோருக்கு எல்லா பொருட்களையும் விட சிறந்தது உயிர். ஆனால் அந்த உயிரை விடப் பெண்களுக்கு நாணம் சிறப்புடையது. நாணத்தை விட கற்பு சிறந்தது. இதனை,

**உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்**
**செயிர்தீர் காட்சிக் கற்புச்சிறந் தன்று எனத்**
**தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு**
**காமக் கிழவன் உள்வழிப் படினும்**
**தாவில் நன்மொழி கிழவி கிளப்பினும்**
**ஆவகை பிறவும் தோன்றுமன் பொருளே (தொல். பொருளியல். 111)**

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X


இந்நூற்பா நமக்கு எடுத்துரைக்கின்றது.

**அன்பு**

தலைவன் தலைவியரின் அன்பானது பிறவிதோறும் தொடரும் என்பதனை,

**இம்மை மாறி மறுமை ஆயினும்**
**நீ ஆகியர் எம் கணவனை**
**யான் ஆகியர் நின் நெஞ்சு நேர்பவளே (குறுந்., 49:3-5)**

இப்பாடலடி வழி அம்மூவனார் எடுத்துரைக்கின்றார். இப்பிறப்பு மாறி மறுபிறப்பு வருவதாயினும் நீயே என் கணவன். நான் உன் மனம் ஒத்தவளாவேன் என்றாள் தலைவி. இதன் மூலம் கற்பொழுக்கமுடைய பெண் எத்தனை பிறவி எடுத்தாலும் தன் கணவனே தனக்கு எல்லா பிறவியிலும் கணவனாக வரவேண்டும் என எண்ணுகிறாள்.

தலைவனுக்காக முற்றிய தயிரை தலைவியானவள் தன் மெல்லிய விரல்களால் பிசைந்து குவளையைப் போன்ற மையுண்ட கண்களில் தாளிப்பினது புகை நெருங்கி படர இனிய புளிப்புச் சுவையுடைய குழம்பினைத் தலைவி தானே சமைத்து தனது கணவனுக்குப் பரிமாறினாள். அவன் அதனை உண்டு இனிது என புகழ்ந்துக் கூறியதை,

**முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்**
**கழுவுறு கலிங்கம், கழாஅது, உடீஇ**
**குவளை உண்கண் குய்ப்புகை கழுமத்**
**தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர்**
**இனிது எனக் கணவன் உண்டலின்**
**நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே (குறுந்., 167)**

இப்பாடலில் கூடலூர் கிழார் பறைசாற்றுகின்றார். தலைவனுக்காக தலைவியானவள் சிரமம் பார்க்காமல் அவனுக்குப் பிடித்தது போல் சமைத்துக் கொடுக்கின்றாள். இதன் மூலம் சங்க கால பெண்கள் தங்கள் கணவன் மேல் வைத்த அன்பினை அறிய முடிகின்றது. தலைவனோடு தலைவிக் கொண்ட அன்பின் சிறப்பினை,

**நிலத்தினும் பெரிதே, வானினும் உயர்ந்தன்று**
**நீரினும் ஆர் அளவின்றே - சாரல்**
**கருங்கோற் குறிஞ்சிப் பூக் கொண்டு**
**பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே (குறுந்., 3)**

இப்பாடல் வழி தேவகுலத்தார் அறிவுறுத்துகின்றார். தலைவனோடு தலைவி கொண்ட அன்பானது நிலைத்த விட அகலத்தால் பெரியது. வானை விட உயர்ந்தது. கடலை விட ஆழமானது என்கிறார். ஒரு பெண் தன் தலைவன் மேல் கொண்ட அன்பினை இதனை விட சிறப்பாக எவராலும் கூற இயலாது.பிசிராந்தையார் வயதான பின்பும் தன் முடி நரையின்றி இருப்பதற்கு காரணம் மாட்சிமையுடைய தன் மனைவி என்கிறார். இதனை,

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

**யாண்டுபல வாக நரையில வாகுதல்**
**யாங்கா கியரென வினவுதி ராயின்**
**மாண்டவென் மனைவியொடு மக்களு நிரம்பினர் ( புறம்., 191:1-3)**

என்னும் பாடலடிகளில் எடுத்துரைக்கின்றார். இல்லாள் மாட்சிமை பொருந்தியவளாக இருந்தால் தலைவனுக்கு எக் கவலையும் இருக்காது. அதனால் எளிதில் நரை வராது என்பதனை இப்பாடல் நமக்கு உணர்த்துகின்றது இதன் மூலம் ஆணின் வாழ்வு அவனது மனைவியின் அன்போடு இணைந்துக் கலந்திருப்பதை காண முடிகின்றது.

**மக்கட்பேறு**

இல்வாழ்க்கையில் நல்ல அறிவு பெற்ற மக்களைப் பெறுதல் பெரும்பேறாக கருதப்பட்டது. பெண்களுக்கு இதைவிட சிறந்த செல்வம் எதுவுமில்லை. தங்கள் குழந்தைகளின் மழலைச் சொல் கேட்காதவர்கள் தான் குழலோசை, யாழோசை ஆகிய இரண்டும் இனிமையானவை என்று கூறுவர். இதனை,

**குழலினி தியாழினி தென்பதம் மக்கள்**
**மழலைச் சொல் கேளா தவர். (குறள்: 66)**

இக்குறள் வழி வள்ளுவர் சுட்டுகின்றார். பெண்ணின் தலையாய கடமைகளில் ஒன்று குழந்தைப் பேறு இதனை,

**ஈன்று புறந்தரு லென்றலைக் கடனே**
**சான்றோ னாக்குத றந்தைக்குக் கடனே**
**வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே**
**நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே**
**யொளிறுவா ளருஞ்சம முருக்கிக்**
**களிறெறிந்து பெயர்தல் காளைக்கு கடனே. (புறம்., 312)**

இப்பாடலடிகள் மூலம் அறியலாம். குழந்தையைப் பெற்றெடுத்து அதனை பாதுகாத்துப் பேணி வளர்ப்பது ஒரு தாயின் பெரும் பொறுப்பாகும். இதனை நாம் சங்க இலக்கியங்களில் காண முடிகின்றது.

வினைவயிற் பிரிந்துச் சென்ற தலைவன் குறித்துச் சொல்லிச் சென்ற பருவத்தே தப்பாது மீண்டு வந்தான். அதனால் மகிழ்ச்சியுற்ற தோழி தலைவனிடம் நீ வந்து நின்ற தன்மை, தெய்வத்தன்மை பொருந்திய கற்புடன், குடிக்குச் சிறப்பினைத் தரும் மகனைப் பெற்ற தலைவிக்கு மட்டும் அன்று,எனக்கும் இனிமையைத் தந்தது என்று கூறியதை,

**கடவுட் கற்பொடு குடிக்கு விளக்கு ஆகிய**
**புதல்வற் பயந்த புகழ்மிக சிறப்பின்**
**நன்ன ராட்டிக்கு அன்றியும், எனக்கும்**
**இனிதுஆ கின்றால் சிறக்க நின் ஆயுள் (அகம்.,184: 1-4)**

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

இவ்வடிகள் எடுத்து ரைக்கின்றன. இதன் மூலம் குடிக்குச் சிறப்பு தருவது மக்கட்பேறு என்பதனை அறிய முடிகின்றது.

**விருந்தோம்பல்**

தமிழர்கள் நாகரிகத்திலும் பண்பாட்டிலும் உலகுக்கு முன்னோடியாக விளங்குபவர்கள். அவர்கள் கடைப்பிடித்த இன்றியமையாத பண்பாடுகளில் ஒன்று விருந்தோம்பலாகும். சாதாரண குடிமக்கள் மட்டுமின்றி அரசர்களும் விருந்தோம்பலில் சிறந்தவர்களாக விளங்கினர். இல்லறத்தின் சிறப்புகளில் ஒன்று விருந்தினரை மனம் கோணாமல் வரவேற்று உபசரிப்பதாகும். அனிச்சம் எனப்படும் பூ முகர்ந்தவுடன் வாடி விடக் கூடியது அது போல சற்று முகம் கோணி வரவேற்றாதலே விருந்தினர் வாடி விடுவர். இதனை,

**மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து**
**நோக்கக் குழையும் விருந்து (குறள். 90)**

இக்குறள் எடுத்துரைக்கின்றது. விருந்தினராக வந்தவரை வெளியே விட்டு விட்டு சாகாத மருந்தாக இருந்தாலும் அதனை தான் மட்டும் உண்பது பண்பாடல்ல என்பதனை,

**விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா**
**மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று (குறள். 82)**

இக் குறள்வழி வள்ளுவர் உணர்த்தியுள்ளார். தலைவன் தேர் பாகனிடம் இரவு நேரத்தில் விருந்தினர் வந்தாலும் அவர்களை சிறப்புடன் வரவேற்று நல்லறம் செய்பவள் கற்பினையும் மென்மையான இயல்பையும் இளமையையும் உடைய என் தலைவி என்றான். இதனை,

**அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்**
**முல்லை சான்ற கற்பின்**
**மெல் இயற் குறுமகள் உறைவின் ஊரே (நற்., 142: 9-11)**

ஒளிரும் கூந்தலையும் ஒளி வீசும் நெற்றியினையும் உடையபெண் நடுகல்லைத் தொழுது, இடைவிடாமல் விருந்தினரை நான் எதிர்கொள்ள பெறுவேனாக என்று வேண்டியதை,

**களிறுபொரக் கலங்கு கழன்முள் வேலி**
**யரிதுண் கூவ லங்குடிச் சீறூ**
**ரொலிமென் கூந்த லொண்ணுத லரிவை**
**நடுகற் கைதொழுது பரவு மொடியாது**
**விருந்தெதிர் பெருகதில் யானே யென்னையு**
**மொ-------- வேந்தனொடு**
**நாடுதரு விழுப்பகை யெய்துக வெனவே (புறம்., 306)**

என்னும் பாடல் நமக்கு பகர்கின்றது. விழா காலங்களில் ஊரில் வாழ்வோர் தங்கள் வீடுகளுக்கு வருவோர்க்கு வரையாது உணவளித்துள்ளனர்.விருந்துண்டு எஞ்சிய உணவினைத் தலைவி வழங்க, தான் உண்ணும் இன்பமே சிறந்தது என தலைவன் எண்ணியதை,

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

**வருநர்க்கு வரையா, வளநகர்ப் பொற்ப**
**மலரத் திறந்த வாயில் பலர்உண**
**பைந்திணம் ஒழுகிய நெய்மலி அடிசில்**
**வசைஇல் வான்திணைப் புரையோர் கடும்பொடு**
**விருந்து உண்டு எஞ்சிய மிச்சில் பெருந்தகை**
**நின்னோடு உண்டலும் புரைவது (குறிஞ்சி., 202-207)**

இவ்வடிகள் நமக்கு எடுத்துரைக்கின்றன.

**இசை வல்லுநர்**

பொற்காலம் என்றழைக்கப்படும் சங்க காலத்தில் பெண்பாற் புலவர்கள் இலக்கிய ஆளுமை மிக்கவர்களாக காணப்பட்டதல்லாமல் இசை வல்லுநர்களாகவும் காணப்பட்டனர். இசையும் பாட்டும் ஒன்றோடு ஒன்று பிணைந்துக் காணப்பட்டன. பெண்களின் இசை திறன் அவர்களுக்கு மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது. "பெண்களின் பிறப்பு முதல் ஒவ்வொரு நகர்விலும் இசைக்கலை இயைந்து காணப்படுகின்றது. குடும்பம், சமூகம் இவற்றின் மகிழ்ச்சிக்கு இசைக்கலை சிறந்த ஒரு துணையாக நிற்கின்றது. அதன் முழுமைக்கும் சாத்தியமானவள் பெண் ஆவாள். எனவே இலக்கியங்களில் பல நிலைகளில் பெண்களின் இசை உணர்வு பதிவாகியுள்ளது. சங்க கால மகளிர் கலைகளில் வல்லவராகத் திகழ்ந்தனர். வாழ்க்கையில் மகிழ்ச்சி விளைவிக்கும் கலைகள் பலவற்றையும் தமிழ் மகளிர் ஐந்தாம் வயது நிரம்பிப் பன்னிரெண்டாம் வயது முடியவுள்ள ஏழாண்டுகளிலும் நன்றாகக் கற்றுணர்ந்தனர் என்கின்றார் கா வெள்ளை வாரனார். எனவே இசைப் பயிற்சியும் மகளிருக்கு இன்றியமையாததாக கருதப் பெற்றனர்" (மு. பூர்ணிமா. ப. 536). வளைந்த தண்டனையுடைய யாழோடு பல இசைக்கருவிகளும் இசைக்க ஆம்பல் குழலை ஊதி இசை எழுப்பி மணியை, அடித்து காஞ்சிப் பண்ணைப் பாட எண்ணியதை,

**தீம் கனி இரவமொடு வேம்பு மனைச் செரீஇ**
**வாங்கு மருப்பு யாழொடு பல் இயம் கறங்க**
**கை பயப் பெயர்த்து மை இழுது இழுகி**
**ஐயவி சிதறி ஆம்பல் ஊதி**
**இசை மணி எறிந்து, காஞ்சி பாடி,**
**நெடு நகர் வரைப்பில் கடி நறை புகைஇ**
**காக்கம் வம்மோ- காதல் அம்தோழி**
**வேந்துறு விழுமம் தாங்கிய**
**பூம் பொறிக் கழற்கால் நெடுந்தொகை புண்ணே (புறம்., 281)**

இப்பாடல் நமக்கு எடுத்துரைக்கின்றது. இதன் மூலம் தலைவி, தோழியருடன் காஞ்சிப் பண்பாடியதை அறிய முடிகின்றது. தலைவியும் தோழியும் பாறையால் ஆகிய உடலில் ஐவனை

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X


நெல்லையிட்டு யானையின் தந்தத்தால் ஆன உலக்கையால் குற்றி முருகப்பெருமானை புகழ்வது போல தலைவனைப் புகழ்ந்து பாடியதை,

**வேங்கை தொலைத்த வெறிபொறி வாணரத்**
**தேந்து மருப்பி னின்வண் டிமிர்பூதுஞ்**
**சாந்த மரத்தி னியன்ற வுலக்கையா**
**லைவன வெண்ணெ லறையுரலுட் பெய்திருவா**
**மையினை யேத்துவாம் போல வணிபெற்ற**
**மைபடு சென்னிப் பயமலை நாடனைத்**
**தையலாய் பாடுவா நாம்…**
**….கூடி யவர்திறம் பாடவென் றோழிக்கு**
**வாடிய மென்றோளும் வீங்கின**
**வாடமை வெற்ப னளித்தக்காற் போன்றே (கலித்., 43 (7))**

கானவன் காவற்பரணிலே கள்ளுண்டு களித்து இருந்தான். மயிர்ச் சாந்து தடவப் பெற்ற பரந்த கரிய தன் கூந்தலை மெதுவாக அசைந்து வரும் காற்றுப் புகுந்து உலர்த்த அவனுடைய மனைவி கொடிச்சியானவள் தழைத்து நீண்ட அக்கூந்தலைத் தன் கையினால் பெயர்த்துக் கோதியவளாய்ப் பெரிய மலைப் பக்கத்த குறிஞ்சிப் பாடலைப் பாடினாள். அப்பாடலைக் கேட்ட இளங்களிறு தான் உண்ண விரும்பி வந்த தினைக் கதிரினை உண்ணாமல், கண்களில் உறக்கம் வரப்பெற்று அவ்விடத்திலேயே உறக்கம் கொண்டுள்ளது இதனை,

**ஒலியல் வார் மயிர் உளரினள்கொடிச்சி**
**பெருவரை மருங்கில் குறிஞ்சி பாட**
**குரலும் கொள்ளாது நிலையிலும் பெயராது**
**படாஅப் பைங் கண்பாடு பெற்று, ஒய்யென**
**மறம் புகல் மழ களிறு உறங்கும் நாடன் (அகம்., 102: 5-9)**

இவ்வரிகள் சுட்டுகின்றன. பெண்களின் இசைக்கு காட்டு விலங்குகளும் மயங்கியதை இலக்கியங்கள் வழி அறிய முடிகின்றது பெண்கள் இசையிலும் புலமை பெற்று விளங்கியுள்ளனர்.

**வீரம்**

சங்க கால ஆண்களுக்கு மட்டுமல்ல பெண்களுக்கும் வீரம் உண்டு தன் வயிற்றில் பிறந்த மகன் வீரம் உடையவனாக விளங்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தனர். போர்க்களத்தில் விழுப்புண்பட்டு இறந்து கிடந்த மகனை கண்ட தாயின் மார்பில் பால் சுரந்தது. போரில் பின்னிட்டு ஓடாத உறுதிமிக்க வீரன் ஒருவனின் உடல் கண்டு அவனை ஈன்ற தாய் அடைந்த பேற்றினை,

**கடல் கிளர்ந்தன்ன கட்டூர் நாப்பண்**

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

**வெந்து வாய் மடித்து வேல் தலைப் பெயரி,**
**தோடு உகைத்து எழுதரூஉ, துரந்து எறி ஞாட்பின்**
**வரு படை போழ்ந்து வாய்ப் பட விலங்கி**
**கிடைப் படை அழுவத்துச் சிதைந்து வேறாகிய**
**சிறப்புடையாளன் மாண்பு கண்டருளி**
**வாடு முலை ஊறிச் சுரந்தன**
**ஓடாப் பூட்கை விடலை தாய்க்கே (புறம்., 295)**

இப்பாடல் விளக்குகின்றது. மறக்குடியில் பிறந்த மகள் ஒருத்தியின் துணிவையும் வீரத்தையும்,

**கெடுக சிந்தை கடிது இவள் துணிவே**
**மூதில் மகளிராதல் தகுமே**
**மேல் நாள் உற்ற செருவிற்கு இவள் தன்னை…**
**…வேல் கைக் கொடுத்து வெளிது விரித்து உடீஇ**
**பாறு மயிர்க் குடுமி எண்ணெய் நீவி**
**ஒரு மகன் அல்லது இல்லோள்**
**செருமுகம் நோக்கிச் செல்க என விடுமே (புறம்., 279)**

இப்பாடல் எடுத்துரைக்கின்றது. முதல் நாள் போரில் தந்தையையும் மறுநாள் போரில் கணவனையும் இழந்த பெண் தன் ஒரே மகனின் கையில் வேலை கொடுத்து வெண்மையான ஆடை உடுத்தி பரந்து கிடந்த குடுமி தலைக்கு எண்ணெய் தடவி போர்க்களம் நோக்கி போய் வா என்று கூறி அனுப்பினாள். இதன் மூலம் பெண்களின் வீரத்தை அறிய முடிகின்றது.

**முடிவுரை**

சங்ககால பெண்கள் கற்பொழுக்கத்தில் சிறந்தவர்களாக இருந்தனர். கணவனுக்கு ஏற்றம் தரும் வகையில் ஒழுக்கமுடையவர்களாகவும், அன்பானவர்களாகவும் திகழ்ந்தனர். பெண்கள் இல்வாழ்க்கையில் நல்ல அறிவு பெற்ற மக்களைப் பெறுதலைப் பெரும்பேறாக எண்ணினர். பெண்ணின் தலையாய கடமைகளில் குழந்தைப்பேறு இன்றியமையாத தாகும். நம் முன்னோர்கள் கடைப்பிடித்த பண்பாட்டில் விருந்தோம்பலும் ஒன்றாகும். சாதாரண குடிமக்கள் மட்டுமின்றி அரசர்களும் விருந்தோம்பலில் சிறந்தவர்களாக விளங்கியதை இலக்கியங்கள் வழி அறியமுடிகின்றது. சங்க கால பெண்கள் இசையிலும், கலையிலும், கல்வியலும், வீரத்திலும் வல்லுநர்களாகத் திகழ்ந்தனர். பெண்களின் இசைக்கு இளங்களிறு தான் உண்ண விரும்பி வந்த தினைக் கதிரினை உண்ணாமல் உறக்கம் கொண்டதை இலக்கியங்கள் நமக்கு பறைச் சாற்றுகின்றன.

**குறிப்புகள்**

[1] அலெக்ஸ் அருள் தாசன், ஞா. "வேளாண் மகளிர் சமூக வாழ்வியல்." *தமிழ் மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*. தொகுதி-2, சிறப்பிதழ்-3, தொகுதி-1, பிப்ரவரி-2020.

[2] கருணாநிதி, மு. கலைஞர். *திருக்குறள்.* திருமகள் நிலையம், தி.நகர், சென்னை-17, 2003.

[3] செயபால், இரா. முனைவர். *அகநானூறு.* நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-98, 2024.

[4] செல்வராசு, அ. முனைவர். *புறநானூறு.* நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-50, 2024.

[5] திருஞானசம்பந்தம், ச. பேராசிரியர். *தொல்காப்பியம்.* கதிர் பதிப்பகம், திருவையாறு-04, 2018.

[6] நாகராசன், வி. முனைவர். *குறுந்தொகை.* (1 & 2 தொகுதி). நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை-98, 2014.

[7] நித்தியா அறவேந்தன், முனைவர். *குறிஞ்சிப்பாட்டு.* நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-50, 2024.

[8] பாலசுப்பிரமணியன், கு. வெ. முனைவர். *நற்றிணை.* நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-98, 2014.

[9] பூர்ணிமா, மு. "சங்க இலக்கியத்தில் பெண்களின் இசை உணர்வு." *International Journal of Creative Research Thoughts (IJCRT)*, தொகுதி-11, இதழ்-2, பதிப்பு- பிப்ரவரி-2024.

[10] முனீஸ்மூர்த்தி, மு. *கலித்தொகை.* நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-50, 2024.

[11] யோகேஸ்வரி, அ. "திரு.வி.காவும் பெண்ணியச் சிந்தனையும்." *தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி-2, சிறப்பிதழ்-3, தொகுதி-1, பிப்ரவரி-2020.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் [https://creativecommons. org/licenses/by/4. 0/](https://creativecommons.org/licenses/by/4.0/) கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.